## பேராதனைப் பல்கலைக்கழகம் - 2015

-----------------------------------------------------

பேராதனைப் பல்கலைக்கழகத்தின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்புக்களையும் ஏனைய விளக்கத் தகவல்களையும் உள்ளடக்கிய 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச் சட்டத்தின் 107(5) ஆம் உப பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பல்கலைக்கழகங்கள் அதிகாரச் சட்டத்தின் 108(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பல்கலைக்கழகத்தின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றது. பல்கலைக்கழகங்கள் அதிகாரச் சட்டத்தின் 108(2) ஆம் உப பிரிவின் பிரகாரம், விரிவான அறிக்கையொன்று பல்கலைக்கழகத்தின் உபவேந்தருக்கு 2016 செப்டம்பர் 30 ஆந் திகதி வழங்கப்பட்டது.

### 1.2 நிதிக் கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

-----------------------------------------------------------------------------

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமானதாகத் தேவையான உள்ளகக் கட்டுப்பாடுகளை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

-----------------------------------------------------

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந் நிதிக் கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்க ஒத்ததாக (ISSAI 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக் கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந் நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக் கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக் கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் பல்கலைக்கழகத்தின் நிதிக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி பல்கலைக் கழகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் விளைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக் கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச் சட்டத்தின் பிரிவு 111 இன் பிரகாரம் கணக்காய்வின் நோக்கெல்லையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.4 முனைப்பழியான அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

## 2.1 முனைப்பழியான அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களின் தாக்கத்தினை தவிர்த்து பேராதனைப் பல்கலைக்கழகத்தின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்கி உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 01**

(i) நிதிக் கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்டிருந்த கணக்கு குறிப்பு 1.2 இன் பிரகாரம் அட்டுறு அடிப்படையில் கணக்குகள் தயாரிக்கப்படுகின்றன என குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், பல்கலைக்கழகத்தினால் பேணப்படுகின்ற நிதியக் கணக்குகள் அதற்கு முரண்பட்ட விதத்தில் காசு அடிப்படையில் தயாரிக்கப்பட்டிருந்தன.

(ii) இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களின் மூலம் தேவைப்படும் அல்லது அங்கீகரித்திருந்த போது தவிர சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களை பதிலீடு செய்யக் கூடாதெனினும், 05 நிதியக் கணக்குகளின் கூட்டுத்தொகை ரூபா 2,768,380 தொகையான வரவு மீதி நிதியத்தின் செலவு மீதியுடன் பதிலீடு செய்து கணக்குகளில் காட்டப்பட்டிருந்தன.

**(ஆ) இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 07**

நடைமுறையல்லாத சொத்துக்களுக்கான பயன்படு ஆயட் காலம் வருடாந்தம் மீளாய்வு செய்யப்படாமையால் ரூபா 447,379 கிரயத்திற்கான வீட்டுத் தளபாடங்கள் மற்றும் பொருத்துக்கள் முழுமையாக பெறுமானத்தேய்விடப்பட்டுள்ள போதிலும் தொடர்ந்தும் பயன்டுத்தப்பட்டவாறு காணப்பட்டது. அதன் பிரகாரம் மதிப்பீட்டு வழுவினை இலங்கை பொதுத் துறைக் கணக்கீட்டு நியமம் 03 இன் பிரகாரம் மாற்றியமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(இ) இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமம் 09**

(i) பரிமாற்றமற்ற கொடுக்கல் வாங்கல் ஒன்றின் மூலம் வளதாய் இருக்கும் நிலைக்கு சாட்டப்பட்டுள்ள இருப்பொன்று, அதனை உரித்தாக்கிய திகதியில் உள்ளவாறு நியாயமான பெறுமதியின் அடிப்படையில் கணக்கீடு செய்யப்பட வேண்டும் எனினும், பல் மருத்துவ பீடத்தின் ஜய்கா (JICA) செயற்திட்டத்தில் இருந்து நன்கொடையாக கிடைத்திருந்த 90 இருப்பு விடயங்களை அவ்வாறு கணக்கீடு செய்திருக்கவில்லை.

(ii) பல்கலைக்கழகத்திற்கு சொந்தமான 07 ஏனைய நிதியங்களிலிருந்து ஆண்டின் போது கொள்வனவு செய்திருந்த ரூபா 12,897,191 தொகையான களஞ்சிய பண்டங்களின் பெறுமதிக் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறு மருத்துவ பீடத்தின் நோயியல் (Pathology) திணைக்களத்திற்கு சொந்தமான ரூபா 1,877,853 தொகையான 153 இரசாயன பண்ட விடயங்களும் மருத்துவ பீடத்தின் மற்றும் விஞ்ஞான பீடத்தின் 667 இரசாயன பண்ட விடயங்கள் 740 ஆய்வுகூட உபகரண விடயங்களினதும் இனதும் பெறுமதியினை இனங்கண்டு கணக்கீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) 2014 ஜனவரி 03 திகதிய 843/845 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் ஆரம்பிக்கப்பட்ட மானிடவியல் மற்றும் சமூகவியல் பட்டப்பின் படிப்பு நிறுவனத்தின் பணிகள் 2015 செப்தம்பர் 15 திகதி முதல் உரிய முறையில் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. எனினும் மீளாய்வாண்டு தொடர்பாக பட்டப்பின் படிப்பு நிறுவனத்திற்காக நிதிக்கூற்றுகள் தயாரிக்கப்படாமல் பல்கலைக்கழகத்தின் நிதிக்கூற்றுக்களில் குறிப்பிட்ட காலப் பகுதிக்குரிய ரூபா 1,885,872 தொகை வருமானம் மற்றும் ரூபா 16,948,455 தொகையான செலவுகளை உள்ளடக்கப்பட்டமையால் ஆண்டிற்கான பற்றாக்குறை ரூபா 15,062,583 தொகையினால் மிகையாக காட்டப்பட்டிருந்ததுடன் அதனுடன் தொடர்புடைய ரூபா 11,910,487 இற்கான ஏனைய நிதியம் நிதியங்களின் கீழ் காட்டப்பட்டிருந்தமையால் நிதி நிலைமை கூற்றில் நடைமுறை அல்லாத பொறுப்புக்கள் அதே தொகையால் மிகையாகக் காட்டப்பட்டிருந்தன.

(இ) 1956-1959 காலப் பகுதியில் பல்கலைக்கழகத்தினால் உரித்தாக்கியிருந்த போதிலும், நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்காத குருந்துகொடல்ல, உடபேராதெனிய, மஹகந்த கல்பங்களா மற்றும் பல் மருத்துவ பீடத்திற்கு சொந்தமான 1120 ஏக்கர் 3 ரூட்கள் 21.8 பர்சஸ் பரப்பளவான காணிகளின் பெறுமதி அரசினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பெறுமதி மதிப்பீட்டாளர் ஒருவர் மூலம் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்வதற்காக பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஈ) 30 வருட காலத்திற்காக மலைநாட்டு கிராமிய புனர்நிர்மாண திணைக்களத்திற்கு வழங்கியிருந்த கெட்டம்பேயிலுள்ள 40.97 பர்சஸ் காணி தொடர்பாக 1992 திசெம்பர் 31 திகதி முதல் 2015 திசெம்பர் 31 திகதி வரை பல்கலைக்கழகத்திற்கு அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 5,960,000 தொகையான நிலுவைக் குத்தகையினை கணக்கீடு செய்திருக்கவில்லை.

### 2.2.3 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் உள்ளவாறு இடர் கடன் பேரேடு மற்றும் பட்டோலைகளிடையே ரூபா 375,584 தொகையான வித்தியாசமொன்று காணப்பட்டதுடன், மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு அம் மீதி ரூபா 728,385 தொகை வரை அதிகரித்திருந்தது.

(ஆ) விவசாய பீடத்தில் ஆண்டின் போது மிருகங்கள் கொள்வனவு என ரூபா 2,163,049 தொகை கணக்கீடு செய்திருந்த போதிலும் பௌதீக மெய்மையாய்வு அறிக்கையின் பிரகாரம் அவை ரூபா 2,356,049 தொகையாகக் காணப்பட்டமையால் ரூபா 193,000 தொகையான வித்தியாசமொன்று அவதானிக்கப்பட்டது.

### 2.2.4 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

மீளாய்வாண்டின் போது ரூபா 1,410,024,855 கூட்டுத்தொகையான 09 கணக்கு விடயங்கள் தொடர்பாக அவற்றிற்கு எதிரே சுட்டிக் காண்பிக்கப்பட்டுள்ள சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| | விடயம் | பெறுமதி<br>ரூபா | சமர்ப்பிக்கப்பட்டிருக்காத சான்றுகள் |
|---|---|---|---|
| (அ) | 2015 ஜனவரி முதல் திசெம்பர் மாதம் வரையான கல்வி மற்றும் கல்விசாரா பதவியணியினருக்கான ஆய்வுப் படி | 150,113,165 | குறிப்பிட்ட ஆய்வு அறிக்கைகள் மற்றும் முன்னேற்ற அறிக்கைகள் |
| (ஆ) | அறிவுரைச் சேவை வழங்குவதற்காக உதவி செய்வதற்காக 99 அலுவலர்களுக்கு செலுத்தியிருந்த படி | 1,334,750 | படிகள் பெற்றுக்கொண்ட அலுவலர்கள் ஆற்றிய பங்களிப்பு பற்றிய தகவல்கள் |
| (இ) | நானாவித கடன்கொடுத்தோர் மீதி | 385,319 | கடன்கொடுத்தோர் மீதியை உறுதிப்படுத்தல் கடிதங்கள் |
| (ஈ) | பெறவேண்டிய மீதிகள் | 12,686,402 | பட்டோலைகள் மற்றும் மீதி உறுதிப்படுத்தல்கள் |
| (உ) | 160 ஏனைய நிதியங்களின் செலவுகள் மற்றும் வருமானம் | 506,962,065<br>639,322,256 | வருமானச் செலவுகளின் வகைப்படுத்தல்கள் |
| (ஊ) | 201 பலவின நிதியங்களுக்குரிய பணத்தை பயன்படுத்தல்கள் | 99,220,898 | மீதிகளை உறுதிப்படுத்தல்கள் |
| | கூட்டுத்தொகை | **1,410,024,855** | |

## 2.3 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ரூபா 1,112,996 கூட்டுத்தொகையான 2 வருடங்களை விட பழமையான 19 கடன் மீதிகள் மற்றும் ரூபா 180,787 கூட்டுத்தொகையான ஒரு வருடத்தை விட பழமையான 02 கடன் மீதிகளை அறவீடு செய்வதற்காக நடவடிக்கைகள் எடுத்திருக்கவில்லை.

(ஆ) மத்திய பொறியியல் உசாத்துணை பணியகத்தினால் பல்கலைக்கழகத்தின் தகவல் தொழிநுட்ப மத்திய நிலையத்தின் நிர்மாண வேலை விடயங்கள் 2002 ஆண்டின் போது பூர்த்தி செய்யப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் இறுதித் திகதி வரையிலும் பணியகத்திற்கு செலுத்தப்பட வேண்டிய ரூபா 2,401,745 தொகையினைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(இ) பல்கலைக்கழகத்திற்குச் சொந்தமான உத்தியோகபூர்வ வாசஸ்தலங்களில் மற்றும் பல்கலைக்கழக வளவினை வெளிசாராருக்கு வாடகைக்கு கொடுத்ததன் மூலம் 2014 ஆண்டு முதல் கிடைக்க வேண்டிய குத்தகை வாடகை, நீர், மின்சார பட்டியல்களின் கூட்டுமொத்தம் ரூபா 4,438,308 தொகையாகும். அதனை அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஈ) நீண்ட காலமாக அறவிடப்படாமல் காணப்படும் நானாவித முற்பணங்களின் கூட்டுமொத்தமான ரூபா 1,300,526 மற்றும் விழா முற்பணம் ரூபா 170,102 தொகையினையும் அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(உ) 2015 ஆண்டின் போது மருத்துவ கண்காட்சிக்காக வழங்கியிருந்த 07 சிறு வர்த்தக குடில்களில் இருந்து ரூபா 392,400 கூட்டுத்தொகையான குத்தகை வாடகை வருமானத்தை மீளாய்வாண்டின் இறுதித் திகதி வரை அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஊ) 2014/2015 கல்வி ஆண்டிற்காக சேர்க்கப்பட்டிருந்த 2945 மாணவர்கள் தொடர்பாக பெற வேண்டிய பதிவுக் கட்டணத்தில் 69 சதவீதமான ரூபா 2,899,000 தொகை மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(எ) உடன்படிக்கைகளை மீறிய விரிவுரையாளர்களிடம் மிகையாக அறவிடப்பட்டிருந்த ரூபா 2,898,522 தொகை பெறுமதியினைத் தீர்ப்பதற்காக நடவடிக்கை எடுக்காமல் மீளாய்வாண்டின் போது அப் பெறுமதியில் ரூபா 1,622,289 தொகை வருமானத்திற்கு எடுக்கப்பட்டிருந்தது.

(ஏ) பல வருட காலமாக அறவிடப்படாமல் முன்கொண்டுவரப்படும் ஒப்பந்தக்காரருக்கு செலுத்தியிருந்த ரூபா 1,079,967 தொகையான தயாராக்குவதற்கான முற்பணத்தினை அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஐ) கண்டி கடவத் ஸதர மற்றும் கங்கவட கோரளை பிரதேச சபைக்கு குத்தகை அடிப்படையில் வழங்கியிருந்த 25 பர்சஸ் காணி ஒன்றில் இருந்து 1997 ஆண்டு முதல் 2015 திசெம்பர் 31 வரை அறவிடப்பட வேண்டியிருந்த நிலுவை பணம் ரூபா 8,174,000 ஆகும்.

(ஒ) 1980 ஆம் ஆண்டு முதல் 2005 ஆண்டு வரையான காலப் பகுதியில் பாடநெறியினை விட்டுச்சென்றுள்ள 07 பீடங்களை சேர்ந்த மாணவர்களிடம் பெறவேண்டியிருந்த மண்டப கட்டணம் மற்றும் தண்டப்பண கூட்டுத்தொகை ரூபா 2,090,524 தொகையினை அறவீடு செய்வதற்காக முறையான செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஓ) 1970 ஆண்டு முதல் 1999 ஆண்டு வரையான காலப்பகுதியினுள் உடன்படிக்கைகளை மீறியுள்ள விரிவுரையாளர்கள் மற்றும் அலுவலர்கள் 84 பேரிடம் அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 36,007,739 தொகையான பிணை முறிகளின் பெறுமதியினை அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. அத்துடன், அதில் 50 பேர்களிடம் அறவிடப்பட வேண்டிய முறிகளின் பெறுமதி ரூபா 27,038,176 தொகையினை உடன்படிக்கையை மீறிய நாள் முதல் அறவீடு செய்திருக்கவில்லை.

## 2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான இணக்கமின்மைகள்

பின்வரும் இணக்கமின்மைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் |
|---|---|
| (அ) 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டம் | |
| (i) XIII பகுதியின் 99(1) ஆம் பிரிவு | பல்கலைக்கழகங்களுக்கு கிடைக்கும் அனைத்து வருமானங்களும் மற்றும் அதனது அனைத்து செலவுகளும் பல்கலைக்கழக நிதியத்தின் மூலம் மேற்கொள்ளப்பட வேண்டும். எனினும் அதற்கு இணங்காத வகையில் நடத்தப்பட்டு வந்துள்ள 201 நிதியங்களில் மீளாய்வாண்டு இறுதித் திகதி அளவில் ரூபா 883,553,591 தொகையான மீதி ஒன்று காணப்பட்டது. |
| (ஆ) 1958 இன் 15 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதிய அதிகாரச்சட்டம், 2001 ஆகஸ்ட் 24 திகதிய பிர/ஆயதன/11 ஆம் இலக்க மற்றும் 2015 செப்தம்பர் 12 திகதிய கம்.தெ/ரவி/15/2015 ஆம் இலக்க தொழில் ஆணையாளரின் கடிதங்கள் | ஊழியர் சேமலாப நிதியப் பங்களிப்புத் தொகை, ஓய்வூதிய நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியம் ஆகியவற்றை கணிக்கும் போது கல்விப் படியினை கணக்கில் எடுக்கக் கூடாது. எனினும் மீளாய்வாண்டின் போது பல்கலைக்கழகத்தின் 14 பீடங்கள் மற்றும் அலகுகளில் கல்வி பதவியணியினருக்காக கல்விப் படி உள்ளடக்கப்பட்டு மேற்கூறிய நிதியங்களுக்கு பங்களிப்புத் தொகை கணிக்கப்பட்டிருந்தமையால் ரூபா 90,647,530 தொகையொன்று மிகையாகச் செலுத்தப்பட்டிருந்தது. |

| | | |
|---|---|---|
| (இ) | 2002 இன் 14 இலக்க பெறுமதிசேர் வரிச் அதிகாரச் சட்டம் | வரி அறவிடக்கூடிய செயற்பாடு ஒன்றினை மேற்கொள்ளும் அனைத்து நபர்களும் வரி அறவீடு செய்வதற்கு உரிய பண்டங்கள் மற்றும் சேவைகள் வழங்கள் ஆண்டு ஒன்றிற்கு ரூபா 15,000,000 தொகையினை விஞ்சுமிடத்து பெறுமதிசேர் வரி செலுத்தப்பட வேண்டும். எனினும் பல்கலைக்கழகத்தின் கீழ் செயற்படும் பொறியியல் வடிவமைப்பு நிலையத்தில் 2013 முதல் 2015 ஆண்டு வரை ரூபா 48,958,408 தொகைக்கான ஆலோசனை சேவைகள் வழங்கியிருந்த போதிலும், பெறுமதிசேர் வரி செலுத்துவதற்காக பதிவு செய்திருக்காமையால் ரூபா 5,385,424 தொகையான வரி வருமானம் அரசிற்கு இழப்பாகியிருந்தது. |
| (ஈ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவையின் XXIV பந்தியின் 3.7 ஆம் பிரிவு | மீளாய்வாண்டு ஏப்ரல் மற்றும் திசெம்பர் மாதங்களுக்குரிய பல்கலைக்கழகத்தின் தொலைக் கல்வி மற்றும் தொடர் கல்வி கேந்திரத்தில் மொத்தம் ரூபா 7,335,131 கூட்டுத்தொகையான கடன் தவணைகளை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| (உ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | |
| (i) | நிதிப் பிரமாணங்கள் 756 757 மற்றும் 770(3) | மருத்துவ, பொறியியல், மிருக வைத்திய, பல் வைத்திய, விவசாயம் மற்றும் இணைந்த சுகாதார பீடங்களைச் சேர்ந்த திணைக்களங்களிலும் மற்றும் விஞ்ஞான பீடத்தில் 05 திணைக்களங்களிலும், தகவல் தொழில்நுட்ப நிலையத்திலும், இவ் அறிக்கை திகதி வரை, வருடாந்த பொருள் மெய்மையாய்வு நடைபெற்றிருக்கவில்லை.<br><br>நீர் வேலை களஞ்சியம், பொறியியல் பீடம், பொதுக் களஞ்சியம், சிவில் பராமரிப்பு களஞ்சியம் மற்றும் மாவலவத்த பண்ணையில் காலம் கடந்துள்ள மற்றும் மெதுவாக அசையும் ரூபா 2,572,603 கூட்டுத்தொகையான 207 விடயங்கள் தொடர்பாக முறையான நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| (ii) | நிதிப் பிரமாணம் 772 | முன்னைய ஆண்டுகளின் பொருள் மெய்மையாய்வு சபை அறிக்கைகளின் மூலம் சுட்டிக் காட்டியிருந்த விஞ்ஞான பீடத்திற்குரிய விலங்கியல் மற்றும் உயிரியல் திணைக்களங்களில் 2016 ஆகஸ்ட் 16 திகதி அளவில் மொத்தம் ரூபா 658,937 தொகையான காலம் கடந்துள்ள இரசாயனப் பொருட்கள் தொடர்பாக பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |

(ஊ) பல்கலைக்கழகங்கள் மானியங்கள் ஆணைக்குழு மற்றும் உயர் கல்வி நிறுவனங்களுக்கான தாபன விதிக் கோவை

| | | |
|---|---|---|
| (i) | I ஆம் பகுதியின் III ஆம் அத்தியாயத்தின் 26 ஆம் பந்தி | வேளிவாரி விரிவுரையாளர்களுக்கான விரிவுரைகளுக்கு செலவிடப்படும் தொகை மிகவும் அதிகமாக காணப்படுவதால் வெளிவாரி விரிவுரையாளர்கள் பெற்றுக்கொள்ளப்படுவதை பலவீனப்படுத்தும் படி அறிவுரை வழங்கியிருந்த போதிலும் அதற்கு முரணாக 03 பீடங்களுக்குரிய 87 வெளி விரிவுரையாளர்கள் இணைத்தக்கொள்ளப்பட்டு மீளாய்வாண்டின் போது மொத்தம் ரூபா 2,121,304 தொகையான கட்டணம் செலுத்தப்பட்டிருந்தது. |
| (ii) | II ஆம் பகுதியின் VIII ஆம் அத்தியாயத்தின் 6.2 இல் (ii) மற்றும் (iii) ஆம் பந்திகள் | தனது கடமைக்கு மேலதிகமாக மேற்கொள்ளும் சேவையொன்றின் மூலம் உழைக்கும் கட்டணத் தொகையில் 10 சதவீதம் தான் உரித்தான உயர் கல்வி நிறுவனத்திற்கு செலுத்த வேண்டும். எனினும், பல்கலைக்கழக கல்வி பதவியணியினருக்கு பலவிதமான சேவைகளின் காரணமாக மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகளுக்குரிய ரூபா 1,931,534 கூட்டுத்தொகையினை பல்கலைக்கழக நிதியத்திற்கு செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| (iii) | II ஆம் பகுதியின் IX அத்தியாயத்தின் 2.1 மற்றும் 2.2 ஆம் பிரிவுகள் | மேலதிக நேர வேலைக்காக அதிகாரம் வழங்குவதற்கு, வழமையான வேலைகளில் இருந்து நிச்சயமாகவே புறம்பானதும், அவசரமானதும், வழமையான அலுவலக நேரத்தில் செய்ய முடியாத வேலைகளாக மாத்திரம் இருக்க வேண்டும். எனினும் கலை பீடத்தில் வேலைக்களுக்காக மீளாய்வாண்டின் போது ரூபா 2,819,348 தொகையான பணம் மேலதிக நேர படியாக செலுத்தப்பட்டிருந்தது. |
| (iv) | II ஆம் பகுதியின் XX ஆம் அத்தியாயத்தின் 3.1 மற்றும் 3.2 ஆம் பந்திகள் | வருகை மற்றும் வெளிச்செல்லல்களை உறுதிப்படுத்தல் மேற்கொள்ளப்படாமல் கல்விசார் பதவியணியினருக்கு மீளாய்வாண்டின் போது சம்பளங்கள் மற்றும் படிகயாக ரூபா 1,959,408 தொகை செலுத்தப்பட்டிருந்தது. |
| (v) | II ஆம் பகுதியின் XXV ஆம் அத்தியாயத்தின் 2.2(ஊ) ஆம் பந்தி | 2013 ஆண்டின் போது வாகன விபத்துக்கள் மூலம் ஏற்பட்டிருந்த ரூபா 103,980 இற்கான நட்டத்தினை 2015 திசெம்பர் 31 திகதி வரை அறவீடு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுத்திருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (vi) | II ஆம் பகுதியின் XXVI ஆம் அத்தியாயத்தின் 2.1 ஆம் பந்தி | நிதியாண்டு இறுதித் திகதியில், ஆணைக்குழுவிற்கு மற்றும் உயர் கல்வி நிறுவனத்திற்கு சொந்தமான நிலையான சொத்துக்கள், அவ் விடயத்திற்காக நியமனம் செய்யப்படும் மதிப்பீட்டு சபை ஒன்றின் மூலம் மெய்மையாக்கப்பட வேண்டும். எனினும் 15 வருட காலம் முதல் பொறியியல் பீட நூலகத்தின் புத்தகங்கள் தொடர்பாக அவ்வாறு மெய்மையாதல் நடத்தியிருக்கவில்லை. |
| (எ) | 1990 பெப்ரவரி 06 ஆந் திகதிய 422 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் மானியங்கள் ஆணைக்குழுச் சுற்றுநிருபம், 2013 ஜனவரி 09 ஆந் திகதிய PE/1/174/1-2003 ஆம் இலக்க நிதி அமைச்சின் சுற்றறிக்கை | திறைசேரியின் அங்கீகாரம் இன்றி / ஊக்குவிப்பு கொடுப்பனவு மற்றும் விஷேட கொடுப்பனவுகள் செலுத்துவதற்கு முடியாத போதிலும், மீளாய்வாண்டின் போது பல்கலைக்கழகத்தின் மற்றும் பீடங்களின் உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்கள் 260 பேருக்கு கௌரவப் படிகள் மற்றும் கூட்டிணைப்பு கொடுப்பனவுகளாக ரூபா 2,792,050 கூட்டுத்தொகை மற்றும் தகவல் தொழிநுட்ப நிலையத்தின் தொலைகல்வி மற்றும் தொடர்ச்சி கல்வி கேந்திரத்தின் பாடநெறி கூட்டிணைப்புக் கட்டணமான ரூபா 1,050,522 தொகையொன்று பொறியியல் பீடத்தின் உதவிப் நிதியாளருக்கு நிதியாளர் படிகள் மற்றும் கௌரவப் படிகளாக ரூபா 40,000 தொகையும் செலுத்தப்பட்டிருந்தது. |
| (ஏ) | 2004 ஜூலை 29 ஆந் திகதிய PED 25 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | நிதி அமைச்சரின் ஒருங்கிணைப்பாடு மற்றும் விடயத்திற்கு பொறுப்பான அமைச்சரின் அங்கீகாரம் இன்றி மற்றும் நிருவாக சபையின் அங்கீகாரம் இன்றி 66,995,652 கூட்டுத்தொகை அரச வங்கிகளில் நிலையான வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்டிருந்தது. |
| (ஒ) | 2000 ஜனவரி 19 ஆந் திகதிய 380 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை மற்றும் பல்கலைக்கழக தாபனக் விதிக்கோவையின் II ஆம் பகுதியின் VII ஆம் அத்தியாயம் | திறைசேரியின் அங்கீகாரம் இன்றி கலை பீடத்தில் ஏனைய நிதியங்களிலிருந்து ரூபா 357,750 தொகையான படிகள் செலுத்தப்பட்டிருந்தது. |

## 2.5 போதிய அதிகாரத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பொறியியல் பீடத்தில் நிறுவப்பட்டுள்ள கணனி நிலையத்தின் கணனிகள் மற்றும் ஏனைய துணைக் கருவிகள் மூலம் பட்டப் பின் படிப்பு பரீட்சாத்திகளுக்கு மற்றும் பீடத்திற்கு வெளியே நிறுவனங்களுக்கு சேவைகள் வழங்குதல் தொடர்பாக மீளாய்வாண்டின் செப்தம்பர் 30 திகதியில் உள்ளவாறு ரூபா 234,000 தொகையான வருமானத்தை உழைத்திருந்த போதிலும் அவ்வாறான சேவைகள் வழங்குதல் மற்றும் கட்டணங்கள் அறவீடு செய்தல் தொடர்பாக முறையான அங்கீகாரம் ஒன்றினை கணக்காய்விற்கு சமர்ப்பித்திருக்கவில்லை.

(ஆ) கலை பீடத்தில் நடாத்தப்பட்டு வந்துள்ள பட்டப்பின்படிப்பு பாடநெறி நிதியத்தின் நிருவாக நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக மீளாய்வாண்டின் போது கலை பீடத்தின் கல்விசாரா பதவியணியினருக்கு ரூபா 1,121,044 கூட்டுத்தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த போதிலும் அதற்கான முறையான அங்கீகாரமொன்று கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான நிதி விளைவுகள் ரூபா 139,547,815 ஆன மிகையொன்றாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொத்ததாக முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 37,090,295 ஆகக் காணப்பட்டமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பீடு செய்யும் போது மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 176,638,110 ஆன முன்னேற்றமொன்று அவதானிக்கப்பட்டது. ஊழியர் ஊதிய செலவுகள் ரூபா 740,676,210 தொகையினால் அதிகரித்திருந்த போதிலும், மீண்டுவரும் செலவுகளுக்காக திறைசேரியின் நிதியேற்பாடுகள் ரூபா 809,878,442 தொகையால் மற்றும் மஹபொல புலமைப் பரிசில் மானியம் ரூபா 71,425,200 தொகையினால் அதிகரித்தல் போன்றன மேற்கூறிய முன்னேற்றத்திற்கு முக்கியமான காரணமாகியிருந்தது.

மீளாய்வாண்டினது மற்றும் முன்னைய 04 ஆண்டுகளினதும் நிதி விளைவுகளைப் பகுப்பாய்வு செய்யும் போது 2011 ஆண்டு முதல் 2014 ஆண்டு வரையும் நிதி பற்றாக்குறை ஒன்று ஏற்பட்டிருந்ததுடன், 2015 ஆண்டின் போது நிதி மிகை ஒன்று ஏற்பட்டிருந்தது. அவ்வாறே ஊழியர் ஊதியம் மற்றும் நடைமுறை அல்லாத சொத்துக்களுக்காக பெறுமானத்தேய்வை என்பவற்றை கவனத்தில் எடுக்கும் போது 2011 ஆண்டின் போது ரூபா 1,861,686,183 தொகைக்கான பங்களிப்புத் தொகை தொடர்ச்சியாக அதிகரித்து 2015 ஆண்டின் போது ரூபா 4,249,095,639 தொகை ஆகியிருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

மீளாய்வாண்டிற்காக மானிட மூலதன அபிவிருத்தி (Human Capital Development) செயற்திட்டத்திற்காக திறைசேரியினால் வழங்கியிருந்த ரூபா 10,500,000 தொகையினை செயற்திட்டத்தின் குறிக்கோள்களுக்கு முரணாக ஏனைய மூலதனத் தன்மையுள்ள செலவுகளுக்காக பயன்படுத்தப்பட்டிருந்தது.

### 4.2 முகாமைத்துவ செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) முகாமைத்துவ பீடத்தினை அமைப்பதற்கான அதிவிஷேட வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் பீடத்தை சேர்ந்த அனைத்து புதிய திணைக்களங்களையும் அமைத்தல், தொடர்ந்து வரும் விடயங்களை மேற்கொள்ளல் மற்றும் பாடவிதானம் தயாரித்தல் என்பன நடைபெற்றுள்ளதற்கான உறுதிப்படுத்தல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

(ஆ) பொறியியல் வடிவமைப்பு நிலையத்தினால் மீளாய்வாண்டின் போது ரூபா 22,291,960 கூட்டுத்தொகையான 68 உசாத்துணை சேவைகள் வழங்கல்கள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், அச் சேவைகள் வழங்குவதற்கு ஏற்றுக்கொள்ளும் போது நிலைய முகாமையினால் குறிப்பிட்ட சாராருடன் முறையான உடன்படிக்கையொன்றிற்கு உட்பட்டிருக்கவில்லை.

(இ) ஏனைய வருமானங்களில் நேரடி அனுப்புதல்கள் என காட்டப்பட்டுள்ள ரூபா 786,714 கூட்டுத்தொகையான 35 பெறுவனவு மீதிகளை இனங்காண்பதற்காக முகாமையினால் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஈ) மீளாய்வாண்டின் போது கல்விசார் பதவியணியினரில் 95 உத்தியோகத்தர்களுக்காக மாத்திரம் மாணவ விடுதிகள் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் 212 உத்தியோகத்தர்கள் தங்கியிருப்பதாக அவதானிக்கப்பட்டது.

(உ) தேவையினை முறையாக மதிப்பீடு செய்யாமல் மருத்துவ கண்காட்சிக்காக மீளாய்வாண்டின் போது ரூபா 391,000 தொகையொன்று செலவிடப்பட்டு அச்சிடப்பட்ட 850,000 நுழைவுச்சீட்டுக்களில் இருந்து ரூபா 297,577 பெறுமதியான 646,776 நுழைவுச்சீட்டுக்கள் அதாவது 76 சதவீதம் எஞ்சியிருந்தது.

(ஊ) முகாமையுடன் எழுத்துமூலமான உடன்படிக்கையொன்று செய்யாமல், 2012 ஆம் ஆண்டு முதல் பல்கலைக்கழக வளவில் தனியார் கம்பனி ஒன்றினால் தொலைத்தொடர்பு கோபுரம் ஒன்று நிர்மாணிக்கப்பட்டிருந்தது. அதற்காக வாடகை அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(எ) பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் IX ஆம் அத்தியாயத்தின் 55(ஆ) ஆம் பிரிவின் பிரகாரம் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அங்கீகாரம் இன்றி, 2002 நவம்பர் 25 திகதிய ஆந் 309 ஆம் இலக்க நிருவாகக் குழுத் தீர்மானத்தின் பிரகாரம் 2002 ஆம் ஆண்டின் போது பல் உதவியாளர் பயிற்சி பாடசாலை ஆரம்பிக்கப்பட்டு அத் திகதி முதல் மீளாய்வாண்டின் திசெம்பர் வரை பயிற்சி பாடசாலையை நடாத்தி குறிப்பிட்ட பாடநெறிகள் நடாத்தி சான்றிதழ்களும் வழங்கப்பட்டிருந்தன.

(ஏ) பல்கலைக்கழகத்தின் ஆண்கள் விடுதி ஒன்றில் 97 அறைகளில் 356 கட்டில்கள் போடப்பட்டிருந்த போதிலும் 278 மாணவர்கள் மாத்திரம் இணைப்பதற்கு நிர்வாக சபை செயற்பட்டிருந்தமையால் 78 மாணவர்களுக்கு விடுதி வசதிகள் வழங்குவதற்குரிய சந்தர்ப்பம் இழக்கப்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டது.

## 4.3 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சமூகசேவை, நலன்புரி மற்றும் மிருக வள அபிவிருத்தி அமைச்சு செயலாளரின் 2015 பெப்ரவரி 20 ஆந் திகதிய இலக்கம் MLRCD/05/07/703-11 ஆம் இலக்க கடிதத்தின் மூலம், மூன்று வருட காலத்திற்காக தேசிய மிருக வள அபிவிருத்தி சபையின் பணிப்பாளர் ஒருவர் மற்றும் அதன் தலைவராக நியமனம் பெற்றிருந்த பேராசிரியர் ஒருவருக்கு 64 வருடங்கள் பூர்த்தியடையும் 2015 ஜூலை 20 ஆந் திகதியின் பின்னரும் 04 மாதங்கள் 11 நாட்கள் விடுமுறை அனுமதிக்கப்பட்டிருந்தது. அதே போல் கணக்காய்வுத் திகதியாகிய 2015 நவம்பர் 24 ஆந் திகதி வரை பல்கலைக்கழகத்தின் கடமைக்காக வந்திருக்கவில்லை.

(ஆ) விவசாய மற்றும் மிருக வள அமைச்சு செயலாளரின் 2003 ஜனவரி 22 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் விடுவிப்பு அடிப்படையில் ஒரு வருடத்திற்காக 2002 நவம்பர் 21 ஆந் திகதி முதல் ஆணையாளர் நாயக (மிருக வளம்) பதவிக்கு நியமனம் பெற்றிருந்த பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் ஒருவருக்கு பல்கலைக்கழகத்தின் உபவேந்தரின் AE/05 ஆம் இலக்க மற்றும் 2002 நவம்பர் 25 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் 2002 நவம்பர் 21 ஆந் திகதி முதல் 2003 நவம்பர் 20 திகதி வரை சம்பளத்துடன் கூடிய ஏழு வருட விடுமுறை அனுமதிக்கப்பட்டு, பல்கலைக்கழக தாபன விதிக் கோவையின் I ஆம் பகுதி V ஆம் அத்தியாயத்தின் 2.3.2 பிரிவிற்கு முரணாக அக் காலப்பகுதிக்காக சம்பளங்கள் மற்றும் படிகளாக பல்கலைக்கழக நிதியத்தில் இருந்து ரூபா 596,307 கூட்டுத்தொகையும் மிருக வள அமைச்சிலிருந்து ரூபா 263,250 தொகையும் செலுத்தப்பட்டிருந்தது.

(இ) பொறியியல் பீடத்தின் திணைக்களங்களால் வேறு நிதியங்கள் அமைத்து முறையான அங்கீகாரம் இன்றி, அப் பீடத்திற்கு சொந்தமான பௌதீக வளங்கள் மற்றும் மனித வளங்களைப் பயன்படுத்தி பட்டப்பின் படிப்பு பாடநெறிகள் நடாத்தப்படுவதுடன் 2015 நவம்பர் 30 ஆந் திகதியில் உள்ளவாறு அப் பாடநெறிகளின் மூலம் கிடைத்திருந்த ரூபா 44,208,476 கூட்டுதொகை பல்கலைக்கழக நிதியத்திற்கு செலவு வைக்கப்படாமல் அந் நிதியங்களில் பேணிச் செல்லப்பட்டிருந்தது.

(ஈ) பல்கலைக்கழகங்களின் மாணவர்களின் நாளாந்த போக்குவரத்திற்காக மாதாந்த வாடகை செலுத்தும் அடிப்படையில் ஒரு வருட உடன்படிக்கை காலத்திற்கு 02 பஸ் வண்டிகள் பெறுவதற்காக விலைகூறல் அழைத்து கிடைத்திருந்த குறைந்த விலையின் மீது கவனம் செலுத்தாமல் கூடிய கூறுவிலை சமர்ப்பித்திருந்த வழங்குனர் ஒருவர் தெரிவு செய்யப்பட்டிருந்ததுடன், எதுவித உடன்படிக்கையும் இன்றி 2014 ஏப்ரல் முதல் 2015 செப்தம்பர் வரை பஸ் வாடகை மற்றும் எரிபொருள்களுக்காக ரூபா 3,181,046 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(உ) பொறியியல் பீடத்தின் கீழ் உசாத்துணை சேவை வழங்குவதற்காக பொறியியல் வடிவமைப்பு நிலையம் அமைக்கப்பட்டிருந்த போதிலும், அதற்கு புறம்பாக பொறியியல் பீட பதவியணியினரால் வெளிசாராருக்கு உசாத்துணை சேவை வழங்குவதற்காக ''உசாத்துணை சேவை செயற்திட்டம்'' என்ற பேரில் வேறு நிதியம் ஒன்று அமைக்கப்பட்டு மீளாய்வாண்டின் போது அந்த நிதியத்தின் மூலம் ரூபா 1,220,172 தொகையான வருமானம் உழைக்கப்பட்டு உத்தியோகத்தர்களுக்காக படிகளாக ரூபா 566,932 தொகை கொடுப்பனவு செய்யப்பட்ட பின்னர் மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறு ரூபா 4,609,234 தொகையான மீதியொன்று வேறு நிதியங்களின் கீழ் நிதி நிலைமைக் கூற்றில் காட்டப்பட்டிருந்தது.

(ஊ) பல்கலைகழகத்தில் கடமையாற்றிய பெண் விரிவுரையாளர் ஒருவர் கலாநிதிப் பட்டம் படிப்பதற்காக பல்கலைக்கழகத்துடன் மேற்கொண்டிருந்த ரூபா 3,563,966 தொகைக்கான பிணை முறி உடன்படிக்கையின் பிரகாரம் ஒப்பந்த சேவைக் காலத்தை பூர்த்தி செய்யாமல் 2016 ஜனவரி 01 ஆந் திகதி முதல் சேவையை விட்டு விலகுவதை பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்த போதிலும் அந்த பிணை முறியின் பணத்தை அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(எ) பல்கலைக்கழக தாபன விதிக் கோவை மற்றும் பல்கலைக்கழகங்கள் மானியங்கள் ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்ட 1998 ஆகஸ்ட் 18 ஆந் திகதிய 737 ஆம் இலக்க சுற்றறிக்கைக்கு முரணாக, கலை பீடத்தின் கௌரவ மொழித் திணைக்களத்தில் கடமையாற்றும் விரிவுரையாளர் ஒருவர், பட்டப்பின் படிப்புப் பாடநெறி படிப்பதற்காக கலை பீடத்தின் மூலம் அமுல்நடத்தப்படும் உடன்படிக்கை மீறுவோரிடம் கிடைக்கும் நிதியத்தின் (Bond Violation Fund) மூலம் ரூபா 1,000,000 இற்கான கடன்தொகை ஒன்று வட்டி அறவீடு செய்யாமல் வழங்கப்பட்டிருந்தது.

இந்த விரிவுரையாளருக்கு 2014 திசெம்பர் 20 திகதி முதல் 2016 மார்ச் 19 திகதி வரை சம்பளமற்ற கல்வி விடுமுறை வழங்கப்பட்டிருந்தமையால் கடன் தொகையை அறவீடு செய்வதற்கு முடியாதிருந்தது.

## 4.4 நிதியப் பயன்பாடு

பின்வரும் அதவானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கலை பீடத்தின் நீதி திணைக்களத்தின் அபிவிருத்தி வேலைகளுக்காக 2014 திசெம்பர் 08 திகதி முதல் ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 8,701,011 தொகை மீளாய்வாண்டு இறுதித் திகதி வரை குறிக்கோள்கள் சார் கருமங்களுக்காக ஈடுபடுத்தப்பட்டிருக்காமல், அப் பீடத்தின் 2014 மற்றும் 2015 ஆண்டுகளின் போது 06 ஆய்வுகளுக்காக வழங்கியிருந்த ரூபா 3,672,000 கூட்டுத்தொகையான நிதியமும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) விவசாய பீட மாணவர்களுக்காக புலமைபரிசில்கள் மற்றும் மாணவ சங்கங்களின் செயற்பாடுகளுக்காக சில தனியார் நிறுவனங்களினால் 2015 ஜுலை 31 திகதி வரை, வழங்கியிருந்த ரூபா 1,500,000 தொகையொன்று குறிக்கோள்சார் கருமங்களுக்காக பயன்படுத்தப்படாமல் 2015 ஜுலை 12 மற்றும் 2015 திசெம்பர் 11 ஆகிய திகதிகளில் நிலையான வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்டிருந்தது.

(இ) 63 ஏனைய நிதிய மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 35,832,417 கூட்டுத்தொகையினை அவற்றின் குறிக்கோள்களை அடைவதற்காக ஆக்கபூர்வமான விததத்தில் பயன்படுத்தாமல் விளைவற்ற நிலையில் காணப்பட்டதுடன், 95 வெகுமதி நிதியங்களின் ரூபா 68,322,503 கூட்டுத்தொகை புலமைப்பரிசுகள் அல்லது நன்கொடைகள் ஏதும் வழங்கப்படாமலும் விளைவற்ற நிலையில் காணப்பட்டது என அவதானிக்கப்பட்டது.

(ஈ) சர்வதேச ஆய்வு நிலையத்திற்காக மூலதன செலவுத் தலைப்பின் கீழ் பொதுத் திறைசேரியில் இருந்து கிடைத்திருந்த பணத்தில் இருந்து ரூபா 2,534,893 தொகை மீண்டுவரும் செலவுகள் செய்வதற்காக பயன்படுத்தப்பட்டிருந்தது.

(உ) கடந்த ஆண்டுகளின் போது திறைசேரியினால் வழங்கியிருந்த பணத்தில் மீளாய்வாண்டு இறுதி அளவில் ரூபா 534,201,585 தொகை குறிப்பிட்ட செயற்திட்டங்களின் குறிக்கோள்களுக்காக பயன்படுத்தியிருக்கவில்லை. அத்துடன், அலுவலக தளபாடங்கள், மோட்டார் வாகனங்கள் மற்றும் புத்தகங்கள் மற்றும் சஞ்சிகைகள் கொள்வனவு செய்வதற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 442,726,800 கூட்டுத்தொகையான செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

## 4.5 விளைவற்ற மற்றும் குறைப்பயன்பாடுடைய சொத்துக்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கலை பீட மாணவர்களின் புத்துறப்பத்தி அபிவிருத்தி செயற்திட்டத்தினால் (Invatory Development of Art Student) கலை பீடத்திற்கு வழங்கியிருந்த ரூபா 4,651,643 தொகை பெறுமதியான கணனிகள் மற்றும் உபகரணங்கள் எதுவித தேவைக்கும் பயன்படுத்தப்படாமல் 07 ஆம் இலக்க அறையில் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்ததுடன் 2015 ஆகஸ்ட் மாதம் புவியியல் கல்விப் பகுதிக்கு கொள்வனவு செய்திருந்த ரூபா 249,972 இற்கான 04 காட்சிப்படுத்தும் கருவிகள் மீளாய்வாண்டு இறுதி வரை பயன்படுத்தப்படாமல் காணப்பட்டன.

(ஆ) பொறியியல் பீடத்தின் புதிய கணனி நிலையத்திற்காக 2014 திசெம்பர் 23 திகதி ரூபா 5,294,100 இற்காக 50 கணனிகள் கொள்வனவு செய்திருந்த போதிலும், மீளாய்வாண்டின் இறுதி திகதி வரையிலும் குறிப்பிட்ட நிலையம் நிறுவப்பட்டிருக்காமையால் அக் கணனிகள் விளைவற்று காணப்பட்டது.

(இ) பல்கலைக்கழகத்தின் 04 களஞ்சியங்களில் மொத்தம் ரூபா 468,778 தொகைக்கான 56 பலவித உபகரண விடயங்கள் விளைவற்றுக் காணப்பட்டது.

### 4.6 இனங்காணப்பட்ட நட்டங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) உள்ளக விளையாட்டரங்கத்தில் மின் முறைமையை நவீனமயப்படுத்துதல் தொடர்பாக 2013 ஆண்டின் போது முறையான ஆய்வு மற்றும் தேவையினை இனங்காணாமலும் முறையான நியமம் இன்றியும் மின்குமிழ்கள் கொள்வனவு செய்தமையால் ரூபா 3,010,500 தொகைக்கான நட்டமொன்று ஏற்பட்டிருந்தது.

(ஆ) பல்கலைக்கழகத்தின் முகாமையினால் முறையாக செயற்படாமையினால் மருத்துவ பீடத்தினால் உயிருடன் இருக்கும் பிராணிகள் பரிசோதிக்கும் திணைக்களத்தில் சேவையாற்றிய பெண் பேராசிரியர் ஒருவரினால் பல்கலைக்கழகத்துக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டிருந்த முறைப்பாட்டின் மீது நீதிமன்றம் விடுத்த கட்டளையின் பிரகாரம் 2015 திசெம்பர் 02 திகதி கண்டி தொழில் ஆணையாளருக்கு செலுத்தவேண்டிய பங்களிப்புத் தொகை மற்றும் மிகைவிதிப்பு ரூபா 192,398 தொகையும் உச்ச நீதி மன்றத்தில் தாக்கல் செய்திருந்த திருத்திய விண்ணப்பத்தை செல்லுபடியாகாமல் செய்வதற்கான கட்டணம் ரூபா 10,000 ஆக ரூபா 202,398 தொகையொன்று பல்கலைக்கழக நிதியத்தில் இருந்து குறிப்பிட்ட பெண் பேராசிரியருக்கு செலுத்தப்பட்டிருந்தது.

### 4.7 பெறுகைகள் மற்றும் ஒப்பந்த நிருவாகம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பெறுகைகள் வழிகாட்டல் கோவையின் 6.3.3 ஆம் பிரிவுக்கு முரணாக மீளாய்வாண்டின் போது ரூபா 371,606,922 கூட்டுத்தொகையான 69 செயற்திட்டங்களுக்காக வெளிப்படையான தன்மை இன்றி விலைகூறல் திறத்தல் மற்றும் குறைந்த விலையை தீர்மானித்தல் மேற்கொள்ளப்பட்டு தொழிநுட்ப மதிப்பாய்வு குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) பெறுகைள் வழிகாட்டல் கோவையின் 8.9.1 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கு முரணாக பல்கலைக்கழக வளவில் மற்றும் மஹஇலுப்பல்லம பல்கலைக்கழக உப அலகில் ரூபா 1,200,00 கூட்டுப் பெறுமதியான 04 குழாய் கிணறுகள் நிர்மாணிக்கும் செயற்திட்டம் உடன்படிக்கை ஏதும் இன்றி இரு ஒப்பந்தக்காரர்களுக்கு சாட்டப்பட்டு மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு ரூபா 1,172,000 கூட்டுத்தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(இ) பல்கலைக்கழகம் 2012 ஆம் ஆண்டின் போது கறுப்புப் பட்டியலில் சேர்ந்திருந்த நிறுவனம் ஒன்றிற்கு ரூபா 5,338,089 தொகை பெறுமதியான 03 ஒப்பந்தங்கள் 2015 ஆண்டின் போது வழங்கியிருந்தது என கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

(ஈ) பல்கலைக்கழக மருத்துவ பீடத்தில் மூன்றுமாடி அருவை சிகிச்சை வாட்டு நிர்மாணிக்கும் ஒப்பந்தம் தொடர்பாக வரைபுகளுக்காக அனுமதி மற்றும் அபிவிருத்தி அனுமதிப்பத்திரம் பெற்றிருக்காததுடன் தேசிய கட்டங்கள் ஆய்வு அமைப்பு மற்றும் புவிச்சரிதவியல் ஆய்வு மற்றும் சுரங்க பணியகத்தில் இருந்து நிலம் பற்றி இசைவு சான்றிதழ் பெறப்பட்டிருக்கவில்லை.

(உ) விஞ்ஞான பீடத்தின் புள்ளிவிபரவியல் மற்றும் கணனி திணைக்களத்தின் கட்டிடம் நிர்மாணிப்பது தொடர்பாக பெற்றிருந்த மண்சரிவு பற்றிய இசைவு சான்றிதழின் பிரகாரம் இந்த தரையில் மண்சரிவு பற்றி கடினமான பாதுகாப்பற்ற நிலையை காணப்படுவதாகவும், நிர்மாண வேலைகள் மேற்கொள்ளப்படின் அறிக்கையில் காட்டப்பட்டுள்ள நிபந்தனைகளின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட வேண்டும் என குறிப்பிட்டிருந்தமையால் மற்றும் உயர் கல்வி மற்றும் பெருந்தெருக்கள் அமைச்சின் பணிப்பாளர் (பெறுகைகள்) இன் கடிதத்தின் மூலம் இந்த கட்டிடத்திற்காக வேறு பொருத்தமான இடம் ஒன்று தெரிவு செய்யும் படியும் தற்போது நிலம் தயாரிக்கப்பட்ட இடம் அக் கட்டிடத்திற்காக பொருத்தமற்றது எனவும் அறிவித்திருந்த காரணத்தினால் அவ்வறிக்கைகளை பெறுவதற்கு முன்னர் ஒப்பந்தத்திற்காக மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 12,498,457 கூட்டுத்தொகை பல்கலைக்கழக நிதியத்திற்கு நட்டமொன்றாகியுள்ளது.

(ஊ) பல்கலைக்கழகத்தின் 03 விடுதிகளுக்காக உபகரணத் தொகுதிகள் கொள்வனவு செய்வதற்கான பெறுகைகளுக்காக கிடைத்திருந்த குறைந்த விலையை இரத்துச்செய்து வேறு வழங்குனர் ஒருவருக்கு கொடுத்ததன் காரணமாக பல்கலைக்கழக நிதியத்திற்கு ரூபா 5,366,780 தொகை நட்டமொன்று ஏற்பட்டிருந்தது. தேவையினை முறைப்படி இணங்காணாமல் விலை கோரியதன் காரணமாக உபகரணத் தொகுதிகளின் எண்ணிக்கை 1400 இல் இருந்து 1220 வரை குறைவடைந்துள்ளது. அத்துடன் நியமக் மாதிரிகளின் பிரகாரம் பலகைகள் குறிப்பிட்ட இனத்தை சேர்ந்தவையான என வேலை பொறியியலாளரினால் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டதென உறுதிப்படுத்தல் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.8 முறையாக கையேற்கப்படாத காணிகளில் செயற்திட்டங்கள் ஆரம்பித்தல்

பல்கலைக்கழகத்திற்கு சொந்தமான மஹஇலுப்பல்லம உப பல்கலைக்கழக அலகு நிறுவப்பட்டதுடன் காணியின் உரிமையினை பல்கலைக்கழகத்திற்கு உரித்தாக்காமல் முன்னைய ஆண்டின் போது ரூபா 1,738,367 தொகை பெறுமதியான நிர்மாண வேலைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

## 4.9 பதவியணியினர் நிருவாகம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டளவில் ஆரம்பிக்கப்பட்டு 21 வருட காலம் கடந்துள்ள பொறியியல் வடிவமைப்பு நிலையத்திற்கு தேவையான பதவியணியினர்களை அங்கீகரிப்பதற்காக நடவடிக்கை எடுக்காமல் சாட்டுதல் அடிப்படையில் 06 பதவிகளுக்காக 07 உத்தியோகத்தர்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

(ஆ) மீளாய்வாண்டு இறுதித் திகதி அளவில் விவசாய பீடத்தை சேர்ந்த மாவலவத்தை பண்ணையில் 05 பதவிகளில் 16 வெற்றிடங்கள் காணப்படுவதாகவும் இந்த வெற்றிடங்களின் காரணமாக பண்ணையின் வேலைகளை நடத்துவதில் பலவிதமான அசௌகரியங்கள் நிலவுவதாகவும் அவதானிக்கப்பட்டது.

(இ) மிருக வைத்திய மருத்துவமனையை பராமரிக்கும் நிதியத்திலிருந்து மீளாய்வாண்டின் போது அங்கீகாரமின்றி சேர்த்துக்கொள்ளப்பட்ட பதவியணியினருக்காக சம்பளங்கள் மற்றும் படிகளாக ரூபா 1,891,522 கூட்டுத்தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(ஈ) பல் வைத்திய மருத்துவமனையில் நீர் சுத்திகரிப்பு அலகில் நாளாந்த சுத்திகரித்தல் மற்றும் வெளிநோயாளர் பிரிவு நோயாளிகளை பதிவு செய்யும் விடயங்களுக்கு தேவையான பதவியணியினரை சேர்த்துக்கொள்வதற்கு அனுமதியை பெற்று நிரந்தர உத்தியோத்தர்களை சேர்த்துக்கொள்வதற்கு பதிலாக 2013 ஆண்டு முதல் சாட்டுதல் அடிப்படையில் சேர்க்கப்பட்டிருந்த இரண்டு நபர்களின் மூலம் அவ் விடயங்களை மேற்கொள்வதற்காக ரூபா 1,880,496 தொகையான கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 03 இன் பிரகாரம் 2014 ஆண்டு தொடர்பாக ஏற்பட்டுள்ள தவறுகளை முன்னோக்கி சீராக்கம் செய்வதற்கும், மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களுடன் காட்டப்பட்டுள்ள 2014 ஆண்டிற்கான பெறுமதிகளில் பற்றாக்குறை ரூபா 377,855,548 தொகையினால் குறைவடைதலும், மொத்தச் சொத்துக்கள் ரூபா 7,664,304 தொகையினால் குறைவடைதலும், மொத்தப் பொறுப்புக்கள் ரூபா 12,836,560 தொகையினால் குறைவடைதலும், உரிமை மூலதனத்தில் ரூபா 5,172,258 இனால் குறைவடைதலும் காட்டப்பட்டிருந்த போதிலும், அந்த சரிசெய்தல் தொடர்பாக பல்கலைக்கழகத்தின் நிருவாக சபையின் அங்கீகாரத்தினை பெற்றிருக்கவில்லை.

### 5.2 உள்ளகக் கணக்காய்வு

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவையின் 134(1) ஆம் இலக்க பிரிவின் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வானது நிறுவனத்தின் வேலைகள் மற்றும் சேவைகள் மேற்கொள்வதன் மூலம் அல்லது அதில் சம்பந்தப்பட்டவர்களின் கட்டுப்பாட்டிலிருந்து விடுவிக்கப்பட்டிருக்க வேண்டும். எனினும், அதற்கு முரணாக பிரதி உள்ளகக் கணக்காய்வாளர், 21 ஆம் நூற்றாண்டு செயற்திட்டத்தில் பிரதிப் பணிப்பாளர் (நிதி) ஆக கடமையாற்றியதுடன் 2015 மே 5 ஆந் திகதி முதல் 2016 பெப்ரவரி 09 திகதி வரை ரூபா 81,991,423 கூட்டுத்தொகையான பெறுமதியுடைய கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்களை சான்றுபடுத்தல் மேற்கொள்ளப்பட்டு அக் காலப்பகுதிக்காக ரூபா 97,333 தொகையான படியினையும் பெற்றிருந்தார்.

### 5.3 பாதீட்டுக் கட்டுப்பாடு

2003 ஜுன் 02 திகதிய இலக்கம் பீஈடீ/12 பொது முயற்சிகள் பணிப்பாளர் நாயகத்தின் சுற்று நிருபத்தின் 5.2 ஆம் பிரிவின் பிரகாரம், வருடாந்தப் பாதீடு ஆண்டிற்காக குறிக்கோளினை எய்துவதற்கான கருவியொன்றாக பயன்படுத்தப்பட வேண்டும். எனினும் பாதீட்டு மற்றும் உள்ளவாறான வருமானத்தை இணக்கஞ் செய்யும் போது 08 வருமான விடயங்களில் மதிப்பீட்டு வருமானம் ரூபா 150,427,996 தொகையால் மிகையாகச் சேகரித்திருந்ததுடன், 5 வருமான விடயங்களில் மதிப்பீட்டு வருமானம் ரூபா 4,950,000 தொகையினை சேகரிக்க இயலாது போயிருந்தது.

## 6. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு பலவீனங்கள் அவ்வப்போது பல்கலைக்கழகத்தின் உபவேந்தரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டது. பின்வரும் கட்டுப்பாட்டு பகுதிகள் தொடர்பாக விஷேட கவனம் கோரப்படுகின்றது.

| முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்புகள் | | அவதானிப்புக்கள் |
| --- | --- | --- |
| (அ) | கணக்கீடு | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்கள் 01, 07 மற்றும் 09 இன் ஏற்பாடுகளை பின்பற்றாமை. |
| (ஆ) | பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள் | பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள் உரியவாறு தீர்க்கப்பட்டிருக்காமை. |
| (இ) | நிதியங்களின் கட்டுப்பாடு | நிதியங்கள் தொடர்பாக 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் மானியங்கள் அதிகாரச் சட்டத்தினால் குறிப்பிட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் செயற்படாமை. |
| (ஈ) | பெறுகைகள் மற்றும் ஒப்பந்த நிருவாகம் | பெறுகைகள் வழிகாட்டல்களை கடைபிடிக்காமை. |